# National Science Day Invitation

**Author :** ???????????-1

**Date :** February 26, 2017

**T.Stalin Gunasekaran,**
**President,**
**Makkal Sinthanai Peravai,**
**A - 47, Sampath Nagar,**
**Erode - 638011.**
**Ph No : 0424 - 2269186.**




ஈரோடு புத்தகத்திருவிழாவில்
மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில்
ஜி.டி.நாயுடு விருது
ரூபாய் ஒரு லட்சம் பரிசுத்தொகை
மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் ஆண்டுதோறும் புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளர் ஒருவருக்கு 'அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு விருது' என்ற விருது வழங்கப்படவுள்ளது.
விருதாளர் 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வு முயற்சிகளில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். இது மாநிலந்தழுவிய விருது என்பதால் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ளப்படுவர்.
அறிவியல் துறையில் ஆழத்தடம் பதித்த வல்லுனர்களாக விளங்கும் ஐந்து தகுதி பெற்ற அறிவியல் அறிஞர்களின் தலைமையில் ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கே இவ்விருது வழங்கப்படவுள்ளது.
இவ்விருது பாராட்டுக் கேடயத்துடன் ரூபாய் ஒரு லட்சம் பரிசுத்தொகையையும் உள்ளடக்கியதாகும். விருதுத் தொகையை எம்.ஏ.முகமது முஸ்தபாவை நிறுவனராகக்கொண்ட 'சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை' வழங்குகிறது.
தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலுள்ள ஆய்வுக்கூடங்களிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆய்வுக்கூடங்களிலோ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். பெயர்பெற்ற அறிவியல் இதழ்களில் வெளியான தனது 10 மிகச்சிறந்த கட்டுரைகளின் தலைப்புகளையும் வெளியான இதழ்கள் மற்றும் தேதிகளையும் அனுப்பி வைக்க வேண்டும்.
எந்த கண்டுபிடிப்புக்கு ஆய்வாளர் விருதுக்குரியவராக விளங்குகிறார் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கவேண்டும்.
இவ்விருது ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதம் நடைபெறுகிற ஈரோடு புத்தகத் திருவிழா மேடையில் மிகுந்த முக்கியத்துவத்துடன் வழங்கப்படுகிறது.
ஆய்வுக்குறிப்புகளையும் ஆய்வு தொடர்புள்ள அனைத்து ஆவணங்களையும் ஜூலை மாதத்தில் அனுப்பிவைக்க வேண்டும். தேதி மற்றும் முக்கியத் தகவல்கள் அனைத்தும் ஜூன் மாதத்தில் வெளியிடப்படும்
www.makkalsinthanaiperavai.org என்ற இணைய தளத்தில் இவை பற்றிய விபரங்கள் உள்ளன. முகவரி : மக்கள் சிந்தனைப் பேரவை, A-47, சம்பத் நகர், ஈரோடு –638 011. மின்னஞ்சல் : info@makkalsinthanaiperavai.org
தொலைபேசி எண் : 0424 -2269186